RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

Asian Research Association

DOI: 10.54392/ijmrd223S121

# Some Biographical Changes that have taken Place in the Contemporary Tamil Environment

## சமகால தமிழ் சூழலில் நிகழ்ந்த சில வாழ்வியல் மாற்றங்கள்

**M. Thenkarai Maharaja Pillai** [a,*]

[a] Department of Language, Hindustan College of Arts & Science, Kelambakkam, Chennai-603103, Tamil Nadu, India.

*Corresponding author Email: thenkaraipillai67@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd223S121

Received: 13-04-2022; Revised: 13-07-2022; Accepted: 16-07-2022; Published: 19-08-2022

**Abstract:** In line with the principle that life is for living, various changes occur in the lives of humans. The human being who used to eat and sleep as a daily life and lived by giving to others without keeping anything for himself, is living in the modern environment in direct contrast. Various changes occur in the lifestyle. A primitive man's life was an everyday life. Today it has changed in various ways, such as food, dress, culture, accessories, bravery, honor, gifts, hospitality, religious harmony, common welfare, religion, worship, kindness to living beings, faith, superstitions, etc. In this article, it is depicted that the dress of today's man is changing from time to time; food habits that are completely different, hospitality that is missing and a man who is addicted to alcohol.

**Keywords:** Hospitality, Alcohol, Biographical Changes, Lifestyle

**Language:** **Tamil**

## முன்னுரை

வாழ்க்கை வாழ்வதற்கே என்ற கொள்கைக்கு இணங்க வாழ்வியலில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்கின்றன. அன்றாட வாழ்க்கையாக உண்டு உறங்கி வாழ்ந்த மனிதன் தனக்கென்று எதையும் சேர்த்து வைக்காமல் பிறருக்கு கொடுத்து வாழ்ந்த மனிதகுலம் இன்று நேரெதிராக இன்றைய கால சூழலில் வாழ்கின்றனர்.

ஆதிமனிதன் வாழ்க்கை அன்றாட வாழ்க்கையாக இருந்தது, இன்று உணவு, உடை, கலாச்சாரம், அணிகலன்கள், வீரம், மானம், கொடை, விருந்தோம்பல், மத நல்லிணக்கம், பொதுநலம், சமயம், வழிபாமடு, உயிர்களிடத்து இரக்கம் காட்டல், நம்பிக்கை, மூட பழக்கவழக்கம் என பல்வேறு வகைகளில் பரவிய நிலையில் நம் பண்பாட்டு தளங்கள் அமைந்துள்ளன.

இவற்றில் ஒரு சிலவற்றில் ஏற்படும் நேர், எதிர் மறை மாற்றங்களைக் காண்போம்.

'பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அஃது இன்றேல்

மண்புக்கு மாய்வது மன்"

எனும் குறளுக்கு ஏற்ப பண்புடையவர்கள் இருப்பதால் உலகம் நிலைபெற்று இருக்கின்றது (Varadarajan, 2017; Puliyur Kesigan, 2009). பண்புடையவர்கள் இல்லையேல் இவ்வுலகம் மண்ணில் புகுந்து மறைந்து விடும். ஆனால் இன்றையக் கால நிலையில் பண்பாட்டு மாற்றங்கள் பல நிலையில் நிகழ்கிறது.

தான் செய்கின்ற செயல் எதுவாக இருந்தாலும் அதில் அவரவர் கருத்து திணிப்பு நிகழ்கிறது. அவர்கள் கூறும் முடிவே இறுதியானது என்று கூறும் திறத்தினர் அதிகம்.

உதாரணமாக உடை, அணிகலன்கள், விருந்தோம்பல் என எடுத்துக் கொள்வோம்.

காலத்திற்கேற்ற மாற்றம் என்ற நிலைக்கு வந்து அயலவர் நாட்டை பின்பற்றும் நிலை இன்று நம் பண்பாடு ஆகிறது. பல்வேறு இடங்களில் பார்க்கும் கேட்கும் அத்தனையையும் உள்வாங்கிக் கொண்ட மனிதன் அந்த நிலைக்குத் தன்னையும் ஈடுபடுத்திக்கொள்ள முனைகிறான் அல்லது தள்ளப்படுகிறான். முதலில் தான் கடைப்பிடிக்க போகும் செயல் அல்லது வழிமுறைகள் நமக்கு உகந்ததா என்று கூட சற்றும் யோசிக்காத நிலையில் தன்னை மாற்றிக் கொள்கிறான். இது கௌரவ நோக்கமாக கூட இருக்கலாம். இவ்வாறு தன்னை மாற்றிக் கொள்வதால் தங்களுடைய பழைய தன்மைகளை கொஞ்சம் கொஞ்சமாக மாற்றி, மறந்து புதியதொரு கட்டமைப்பிற்குள் நுழைந்து விடுகிறான். பழைய, பாரம்பரிய பண்பாட்டு எச்சங்களைக்கூட மறந்துவிடும் நிலைக்கு வந்து விடுகிறான்.

## உடை

உடையினை எடுத்துக்கொண்டால் பழையன கழிதல் புதியன புகுதல் என்பதற்கு ஏற்ப, இன்று நம் பண்பாட்டு மாற்றங்கள் நிகழ்கின்றன. நவநாகரீகம் என்ற போர்வைக்குள் உடைகள் அகப்பட்டுச் சீரழிகிறது. நம் பாரம்பரிய ஆடையினை அடியோடு மறந்துவிடும் நிலைக்கு வந்து விட்டோம். பெண்கள் புடவை கட்டுதல், ஆண்கள் வேட்டி கட்டுதல் என்பது மறைந்து கொண்டே வருகிறது. அதிலும் குறிப்பாக வேட்டி கட்டுதல் பத்து விழுக்காடு மட்டுமே இருக்கிறது என்று தோன்றுகிறது.

அன்றாடம் கட்டிய வேட்டி இன்று விழாக்காலங்களிலும், கோயில் வழிபாட்டிற்கும் அரசியல் சம்பந்தமான கூட்டங்களுக்கும் என்று மாறிவிட்டதைக் காண முடிகிறது. குறிப்பாக வேட்டி உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் வேஷ்டி வாரம் என ஒரு விளம்பரம் செய்தே விற்கக்கூடிய சூழல் உருவாகி உள்ளது. இது தமிழன் நாகரீகம் என அடிக்கடி விளம்பரங்களில் சொல்லி ஞாபகப்படுத்த வேண்டிய சூழ்நிலை உள்ளது.

## உடன்போக்கின் குறியீடு

உடன்போக்கு நிகழ்வதற்கு முன்னர் தலைவியிடத்தில் ஏற்படும் மாற்றங்களின் குறியீடு இங்கு கவனிக்கத்தக்கது. குறிப்பாக தலைவன் தலைவியரது காதல் வாழ்க்கை வெளியுலகுக்கு தெரிவதற்கு முன்னரே தோழி அறத்தொடு நிற்பாள். திருமணம் செய்து கொள்ளுமாறு தலைவனைக் கட்டாயப்படுத்துவாள். ஆனால் இவர்களது காதல் வெளிப்பட்டு மற்றவர்களால் பலவாறாக பேசப்படும் சூழலில் (அலர் தூற்றல்), தலைவிக்கு ஏதேனும் துன்பம் நேர்ந்து விடுமோ என்று தோழி அஞ்சுவாள். இருப்பினும் பெரியவர்களுக்கு இவர்களின் காதல் தெரிந்தவுடன், தலைவியவள் வெளியே செல்ல முடியாதவாறு இல்லத்திலே காவல் வைக்கப்படுவாள் (இற்செறித்தல்).

இதன் காரணமாக தலைவி தலைவனைச் சந்திக்க முடியாத பெரும் ஏக்கத்தினால் உடல் மெலிந்து போவதைக் கண்டு, உண்மை அறியாதவர்களாக, நற்றாய், செவிலித்தாய் போன்றோர் தெய்வக்குற்றம் என எண்ணி, முருகப் பெருமானுக்கு பூசை செய்வர் (வெறியாட்டு). இறுதியில் தலைவியானவள், அன்னை அறிந்தால் கோபப்படுவாளோ என அஞ்சியும், வேறு ஒருவருக்குத் திருமணம் செய்து விடுவாளோ (நொதுமலர் வரைவு) என்று மனம் கலங்கியும் இருக்கின்ற வேளையில், தோழியின் உதவியோடு தலைவனும் தலைவியும் உடன்போக்கு நிகழ்த்துவர். தலைவியின் மனதில் ஏற்படும் தலைவன் குறித்த இப்பேரழுத்தமே உடன்போக்கிற்கு வழிவகுக்கிறது என்பதை இதன் வழியே அறிய முடிகிறது.

## விருந்தோம்பல்

"மோப்பக் குழையும் அனிச்சம் முகம் திரிந்து

நோக்கக் குழையும் விருந்து"

என்ற நிலை அன்றைய காலத்திற்கு எனக் கூறும் அளவிற்கு விருந்தோம்பல். விருந்தோம்பல் இன்றும் வழுவின்றி இருந்தாலும் முற்றிலும் தன்னுடைய தன்மையிலிருந்து உருமாற்றிக்

கொண்டுள்ளது (Parimelalhagar, 2004; Varadarajan, 2017). அன்றைய சூழலில், வீட்டிற்கு புதியதாக வரும் விருந்தினருக்கு தன் வீட்டில் என்ன இருக்கின்றதோ அதனையே விருந்தினருக்கு கொடுத்து மகிழ்ந்தனர். உதாரணத்திற்கு இராமாயண நிகழ்ச்சியில் இராமனைக் குகன் உபசரித்து' தேனும் தினையும்' அளித்து விருந்தோம்பல் செய்த பண்பை போலவே கிராமங்களில் இன்றும் நிலைத்திருக்கும் பண்பு தன்னுடைய வீட்டில் விளைந்த பொருளை விருந்தினருக்கு பரிசாகக் கொடுக்கும் பழக்கம் ஆனால் அது நகர்ப்புறங்களில் மாற்றம் கண்டுள்ளது. அளவுக்கு மீறிய செலவு என விருந்து உபசாரங்கள் என தன்னை சமுதாயத்தில் அந்தஸ்தில் உயர்ந்தவன் என காட்டிக் கொள்ளவும், இருப்பவனைப் பார்த்து இல்லாதவன் செலவு செய்வது என போட்டி மனப்பான்மையில் இன்றைய விருந்தோம்பல். இந்நிலை மெதுவாக கிராமப்புறங்களில் நகரத் தொடங்கி விட்டது.

## கள்ளுண்ணாமை

கள்ளுண்டு மகிழ்ந்த மரக் குடியினர் நம் தமிழர்கள். வீரம் நிறைந்தவர்கள் போரில் பெற்ற வெற்றியை கொண்டாட கள்ளுண்டு மகிழ்ந்தனர் காலப்போக்கில் உடல் சோர்வை போக்க எனக் கூறிவந்தனர். அதுவும் குறிப்பிட்ட வயதிற்கு மேற்பட்டவர்கள் மட்டுமே. இன்றோ அனைத்து வயதினரும் சரிநிகர் சமானமாய் மதுவுக்கு அடிமையாகி வருகின்றனர்.

பொருளாதாரம் எந்த நிலையில் இருந்தாலும் மதுக் கூட்டங்கள் மட்டும் குறைவதே இல்லை. சிறியவர் முதல் பெரியவர் வரை ஒரே நேர்கோட்டில் அதாவது வரிசையில் மது உண்டு தன்னை மறந்த நிலையில். குறிப்பிட்ட அந்தஸ்துக்கு மேல் உள்ளவர்கள் இல்ல விழாக்கள் என்றாலே மது இல்லாமல் இல்லை என்றாகிவிட்டது.

"உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரான்

எண்ணப் படவேண்டா தவர்"

இதில் கள் குடிக்க விரும்புவோரைச் சான்றோர் மதிக்க மாட்டார்கள் என்று கூறும் வள்ளுவர் இன்று கள்ளுண்டு மகிழ்வது என்னவென்று கூறுவார்? (Parimelalhagar, 2002; Parimelazhagar, 2014).

## அடையாளங்கள்

நமக்கென்ற அடையாளங்கள் நம் பண்பாட்டோடு சேர்ந்து காணப்படுகிறது. விருந்தோம்பல், கலாச்சாரம், வீரம் போன்றவை தொன்று தொட்டு வரும் அடையாளங்கள். இன்றோ அத்தனையும் என்ன காரணத்தினாலோ மறைக்க மறுக்கப்பட்டு வருகிறது.

வீரம் பண்டைய கால இலக்கியங்கள் முதற்கொண்டு மூவேந்தர்களின் ஆட்சி முறையில் தங்களின் உயிரை விடவும் வீரத்தை பெரிதாக எண்ணினர். போர்க்களத்தில் தன் மகனின் புறமுதுகில் வேல் பட்ட அடையாளம் கண்டால் அந்தத் தாய் அவனுக்கு பாலூட்டிய மார்பை பிய்த்து எறியவும் துணிந்தாள என்பது இலக்கியம் காட்டும் செய்தி. இவ்வாறான அடையாளங்கள் பற்பல தமிழ் இலக்கியங்களை படிப்பதை கேவலமாக நினைக்கும் பதர்கள் அதிகம் நம் சமூகத்தில். எழுத்தறிவித்தவன் இறைவன்' அந்த ஆசானே மதிக்க தெரியாதவர்கள் பலர் உண்டு இன்று.அயல் மொழி கற்று அம் மொழியிலேயே பேச வேண்டும் நம் குழந்தைகள் என்று ஆகாயத்தில் மிதப்பவர்கள் அதிகம் தமிழில் பேசினால் தமிழ் புத்தகத்தை கண்டால் அருவருப்பாக பார்க்கும் மூடர் கூட்டங்கள் வாழும் இடங்களில் நம் அடையாளங்கள் நிலைத்து நிற்க ஆவண செய்ய வேண்டும் காலத்திற்கு ஏற்ப மாறவேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டால் மாற்றிக்கொள்ளலாம் ஆனால் நம் அடையாளங்களை மறந்து விடக்கூடாது அந்நிய மோகத்தில் ஆழ்ந்து கிடந்தாலும் இன்று நமக்கு அருமருந்தாக சித்தர் இலக்கியம் கூறும் சித்த மருந்துகள் உறுதுணை என்பதை கண்கூடாக காண்கிறோம் குழந்தை கல்வி முதற்கொண்டு அனைத்தையும் அவரவர் தாய்மொழியிலேயே கற்று கொடுத்தால் மறைக்கப்படும், மறக்கப்படும் ஆரிய பொக்கிஷங்களை உலகிற்கே எடுத்துக்காட்டலாம்.

'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்' கலித்தொகை பாடலுக்கு ஏற்ப, பிறருடைய இயல்பினை அறிந்து, அதற்கு ஏற்ப நடத்தலையோ அல்லது தனக்கென வாழாமல் பிறருக்கெனவே வாழ்வதே

பொதுவானதாக கருதப்பட்டது. அதிலும் பிறருடைய இயல்பினை அறிந்து வாழும் வாழ்க்கை இன்றைய காலத்தில் காண்பது அரிதான ஒன்றாகும். 'பிறரையும் தன்னைப்போல் நேசி' என்ற வாசகம் அனைவருக்கும் ஞாபகப்படுத்த வேண்டிய ஒன்றாக இருக்கிறது.

## முடிவுரை

சமகால சூழ்நிலையில் வாழ்வியலில் பண்பாட்டு மாற்றங்கள் ஏராளமாக நிகழ்ந்துள்ளது. எனினும் தேவையற்ற மாற்றங்களை அதிகம் ஒருசில மூடப்பழக்கங்கள் நம்பிக்கைகள் விடுவிக்கப்பட்டாலும், பெரும்பான்மையான நம்பிக்கைகள் காரண காரியங்கள் தெரியாமலே மறுக்கப்படுகின்றது. என்ன காரணத்திற்காக இதனைக் கடைபிடித்தார்கள் என்பது தெரியாமலேயே தெரிந்துகொள்ள விருப்பப்படாமலேயே அவை மறுக்கப்படுகிறது. அறிவியலும் ஆன்மீகமும் ஒன்றை ஒன்று தொடர்புடையதாகவே காணப்படுகிறது. அறிவியலால் ஏற்படும் ஒரு சில மாற்றங்கள் அன்று ஆன்மீகமாக கற்றுக் கொடுக்கப்பட்டது. இறுதி விளைவுகள் ஒன்றே எனினும் ஆன்மீகத்தை காட்டி அது மறுக்கப்படுவது ஏற்றுக்கொள்ள முடியாததாக புறம் தள்ளுகின்றனர். இது இன்றைய சித்த மருத்துவம், பருவநிலை மாறுபாடு எல்லாம் அறிவியல் சார்ந்த ஆன்மீகமே. ஆடம்பரம் கருதி இவற்றையெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிடவும் முடியாது. தொலைந்து போனால் தேடியும் கிடைக்காத ஒன்றாகிவிடும். வாழ்வில் எத்தனை மாற்றங்கள் வந்தாலும் பண்பாடு மாற்றம் கொள்ளாத நிலையான ஒன்றாக இருக்கும் வரை மனிதம் நிலைத்து நிற்கும்.

## References


Parimelalhagar, (2002) Thirukural, Saradha Pathippagam, Chennai, India

Parimelalhagar, (2004) Thirukkural Parmelazhagar Urai, 5th edition, Saratha Pathippagam, Chennai, India.

Parimelazhagar, (2014) Thirukkural, Saradha Pathippagam, Chennai

Puliyur Kesigan, (2009) Thirukkural, Paari Nilayam, Chennai, India.

Varadarajan, Mu., (2017) Thirukkural Thelivurai, Paari Niliyam, Chennai, India.



## Funding

No funding was received for conducting this study.


## Conflict of interest

The Author has no conflict of interest to declare that they are relevant to the content of this article.


## About the License

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License



## Cite this Article

M. Thenkarai Maharaja Pillai, Some Biographical Changes That Have Taken Place in the Contemporary Tamil Environment, Indian Journal of Multilingual Research and Development, Vol 3, Iss S-1 (2022) 106-109. DOI: https://doi.org/10.54392/ijmrd223121